ORIGINAL ARTICLE

# பொருள்சார் பண்பாடு (பனைமரம்)

## [POORULSAAR PANPAADHU (PANAIMARAM)]

## MATERIALISTIC CULTURE (PALM TREE)

**ச.ஆசைக்கண்ணு [1] / S.Asaikkannu [1]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா / Doctoral Candidate, International Institute of Tamil Studies, Chennai, India.
Email: sakthiasai30@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/13

**ஆய்வுச் சாரம்**

இயற்கையில் இருந்து கிடைத்த உணவினை உண்டும், அவற்றினால் கிடைத்த பொருட்களினால் செய்த புழங்கு பொருட்களையும் கொண்டு இயற்கையோடு இணைந்த வாழ்வினை வாழ்ந்து வந்த பண்டைய தமிழ் மக்கள், இன்று பழமையை மறந்து மேலைநாட்டு நாகரிக வாழ்விலும், பண்பாட்டிலும் மோகம் கொண்டு தங்களின் பழமையையும், பண்பாட்டினையும் மறந்து வருகின்றனர். ஒவ்வொரு காலகட்டத்திலும் அக்காலச் சூழலுக்கு ஏற்ற இயற்கை உணவுகளை உண்டும், இயற்கையோடு ஒன்றியும் வாழ்ந்த வாழ்வினை மீட்டெடுக்கும் விதமாக ஆங்காங்கு பசுமை அங்காடிகளும், இயற்கை உணவகங்களும் இன்று துவங்கப்பட்டு வருகிறது. பல்வேறு நோய்களுக்கு நம்முடைய இயற்கை உணவுகளை மறந்து நவீன மேலைநாட்டு உணவிற்கு மாறியதே காரணம் என்பதை உணர்ந்த மக்கள், இன்று மாற்றத்தை நோக்கி செல்கின்றனர் என்பது சற்று ஆறுதலான செய்தியாகவே உள்ளது. இத்தகைய நிலையில் பண்டைய மக்களின் வாழ்வில் பனைமரம் என்பதும் ஒவ்வொரு நிகழ்விலும் அவர்களோடு ஒன்றியதாகவே திகழ்ந்து வந்திருக்கின்றது. பனைமரத்தில் இருந்து கிடைக்கும் பல்வேறு உணவு பொருட்கள் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய, அவற்றால் மனித சமூகம் அடையும் நன்மைகளை பட்டியலிட்டும், பனைமரத்தால் ஆன புழங்குபொருட்களைப் பற்றியும், அவற்றின் மூலம் பழந்தமிழர்களின் பண்பாட்டினையும் அறிந்து கொள்ளும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**கருச்சொற்கள்:** பனைமரம், பண்பாடு, புழங்குபொருட்கள், ஓலைச்சுவடி, பதனீர், கருப்பட்டி, சீர்பெட்டி

**Abstract**

The ancient Tamil people had lived countless years, being close to nature while consuming food and producing materials originates from that very nature itself. Now, those people have been forgetting their ancient ways and culture due to the influence of the modern civilization and culture. Today, everyday cuisine and natural dishes are starting to rejuvenate people's everyday life and allow them to enjoy the natural food and natural habitat. It is somewhat a comforting message that many people now realise that the various diets from our own natural dishes are actually cure for illness had made them to adapt the food and turned it into a modernised Western-like food. In this case, the use of palm tree and its essence in the lives of the ancient people has been associated with them in every occasion. This article is intended to identify the benefits to the human community that can be derived from the palm trees and the human community that utilized it, by understanding the knowledge of on palm trees and their culture.

**Keywords:** Palm tree, Tamil culture, usage material, *olaichuvadi*, *pataniir*, *karuppaddi*, *siirpeddi*.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 8th January 2019, revised 20th January 2019, accepted 25th February 2019

## 1.0 முன்னுரை

தம் அன்றாடத் தொழில்களில் அறிவியலை நடைமுறைப்படுத்தித் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்துப் பராமரித்து வந்த அடித்தள மக்களின் அறிவு இன்றளவும் கண்டு வியக்கத்தக்கதாக உள்ளது. அத்தகைய அறிவு உடைய மக்களின் பண்பாடு சார்ந்த தொழில்நுட்ப அறிவை இதுவரையில் யாரும் கண்டுகொள்ளவில்லை. அவர்களின் வாழ்வில் பயன்படுத்தும் ஒவ்வொரு புழங்கு பொருட்களின் பின்பும் மிக நீண்டதொரு பண்பாட்டுச் சிறப்பு உள்ளது என்பதையும் யாரும் உணர்வதில்லை. அவ்வகையில் தமிழர்களின் வாழ்வில் பனை மரம் என்பது ஒவ்வொரு நிலையிலும் அவர்களோடு இரண்டறக் கலந்த ஒன்றாகத் திகழ்ந்து வந்துள்ளது. தமிழக மக்களின் வாழ்வில் ஒவ்வொரு காலநிலைகளிலும் பனைமரம் சார்ந்த ஏதேனும் ஒரு பொருள் இடம் பெறுகின்றது.

சான்றாக, தமிழகத்தின் தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் திருமணம் நடைபெறும் வீட்டில் மாப்பிள்ளையின் சகோதரிகள் அவனுக்குச் சீர்பெட்டி வழங்குவது வழக்கமாகும். அவற்றில் துணி, காய்கறிகள், மளிகைப்பொருட்கள், கம்பு, சோளம் போன்ற பொருட்களைப் போட்டு மாப்பிள்ளைக்கு

வழங்குவர். அவ்வாறு வழங்கும் அந்தச் சீர்பெட்டி பனைமர நாரால் ஆன பெட்டியாகும். அதே போன்று தாய்மாமன் சடங்கின் போது தாய்மாமன்(மாருக்கு) வழங்கப் பெறும் சீர்பெட்டியில் அரிசியும், ஆடைகளும் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஒவ்வொரு நிகழ்விலும் பனைமரத்தினது பயன்பாடு தொடர்ந்து இருந்து கொண்டே வருகின்றது. அதனை வெளி உலகுக்குக் கொண்டுசெல்லும் வகையில், நம் முன்னோர்கள் தங்களின் வாழ்வில் பயன்படுத்தி வந்த பனைமரங்கள் சார்ந்த புழங்கு பொருட்களின் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## 2.0 பண்பாடு

பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற எண்ணற்ற கூறுகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. இது மக்களின் வாழ்வியலை ஒட்டுமொத்தமாகக் கொண்டிருப்பதாகும். மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும் என்று பண்பாடு குறித்தான விளக்கங்களாகப் பக்தவத்சல பாரதி (2011)[1] குறிப்பிடுகின்றார்.

தமிழ்நாட்டில் வாழும் பல்வேறுபட்ட மக்கள் குழுவினரின் வாழ்வியல் பற்றி ஆய்வுகள் இன்னும் நடத்தப்படவில்லை. கைவினைக் கலைஞர்களின் வாழ்க்கை, நம்பிக்கைகள், தொழில்நுட்பம், வினைத்திறம், பயன்படுத்தும் கருவிகள், செய்யும் பொருள்கள், அவற்றின் பெயர்கள் என்று ஆய்வு செய்யவேண்டிய களங்கள் விரிந்து கொண்டுதான் இருக்கின்றன. நாட்டார்தம் கட்டடக்கலை பற்றியும், அக்கலையோடு தொடர்புடைய கைவினைக் கலைஞர் பற்றியும் முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். நாட்டார் வாழ்வோடு தொடர்புடைய இரும்பு, செம்பு, பொன், வெள்ளி, மரம் மற்றும் நீர் இறைத்தலுக்கான தோல்பொருள்கள், செருப்புத் தைத்தல், நெசவு தொழில், பாய் பின்னுதல், மூங்கிலால் புழங்கு பொருள் செய்தல், பெட்டிகள் முடைதல், முறம் முடைதல், தூசு துடைக்கும் கருவிகள் செய்தல், கடல்சார் பொருள்கள் செய்தல், செங்கல் அறுத்தல், பானை வனைதல், காளவாய் (செங்கல் சூளை) வைத்தல் போன்ற பல்வேறு தொழில்நிலைகளைப் பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக இன்று விளங்குகின்றது என்பதனை மனத்திற்கொண்டு பனைமரத்தால் ஆன புழங்கு பொருட்களைப் பற்றியதான ஆய்வினை முன்னெடுப்பதின் அவசியத்தை இக்கட்டுரை விளக்குகின்றது.

## 2.1 புழங்கு பொருள் பண்பாடு குறித்த அறிஞர்கள் கருத்து

மனித இனம்தாம் வாழும் இடங்களுக்கு ஏற்பவும் தாம் பயன்படுத்தும் புழங்கு பொருள்களுக்கு ஏற்பவும் தமக்கான பண்பாடுகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளது. இத்தகைய புழங்கு பொருள் என்னும் சொல்லுக்குக் ”கையாளுதல், புழங்குதல்” என்று தமிழ்ப்

பேரகராதியும் (1982)[2], "கையளுதல், பழகுதல்" என்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியும் (2005)[3] விளக்கம் தருகின்றன. மானுட சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப வாழ்ந்தாக வேண்டும். இந்தப் படிமுறையில் சமூகங்கள் தத்தம் சொந்த நோக்கத்திற்கேற்ப இயற்கையான உலகை உருவாக்கிகொள்ள பல்வேறு விதமான கலைப் படைப்புகளை உருவாக்கி வாழ்ந்துள்ளன.

இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப்படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு *(Material Culture)* என்றும் மானுடக்குழு ஒன்றின் தொழிநுட்பத் திறனும் புழங்கு பொருள்சார்ந்த கலைத்தொழில் வேலைப்பாடமைந்த பொருட்களும் புழங்கு பொருள் பண்பாட்டில் அடங்குகின்றன என்று ரெஜித்குமார் (2009)[4] எனும் அறிஞர் குறிப்பிடுகிறார்.

மக்களின் தேவைகளுக்காகப் பொருள்கள் ஏற்படுத்தப்பட்டதால் அத்தேவைகள் பண்பாட்டில் நிலைபெற்றுள்ளவரை அப்பொருள்களும் அப்பண்பாட்டில் இருக்கும். பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டுச் சில குறிபிட்ட தேவைகள் அற்றுப்போகுமானால் அவற்றிற்குரிய பொருள்களும் மறைந்து போகும் என்று பொருட்களைக் கொண்டு மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும் என்று பக்தவத்சல பாரதி (2011)[1] கருதுகின்றார். புழங்கு பொருட்கள் என்பது மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ள உதவும் வரலாற்றுத் தரவுகளாகவே உள்ளதை இதனின்று அறியலாம்.

## 2.2 புழங்கு பொருள் சார்ந்த ஆய்வின் தேவை

மானுடக் குழுவொன்றின் தொழிநுட்பத் திறனும் கலைத்தொழில் வேலைப்பாடமைந்த பொருள்களும் அவற்றினூடே அவர்களின் வாழ்வில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகளும் புழங்கு பொருள் பண்பாட்டினுள் அடங்கும். உயிர் பிழைத்து வாழ்வதற்குரிய வாழ்வியல் கூறுகளும் அதேபோன்று அழகுறுத்தும் நோக்கத்திற்கும் கலைத்திறன் நோக்கத்திற்கும் சடங்கியல் நோக்கிற்கும் பயன்படுத்தப்படும் எல்லாக் கூறுகளும் இப்பிரிவினுள் அடங்கும். புழங்குபொருள் பண்பாடு பற்றிய படிப்பு ஒருவகையில் தொல்லியலோடு தொடர்புடையதும் ஆகும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். மக்கள் குழுவொன்று வாழ்ந்துள்ளது என்பதற்குச் சான்றாகப் புழங்கு பொருள்கள் மட்டுமே கிடைக்கின்ற போது இது தொல்லியலோடு தொடர்புடையது என்று கொள்வது மிகச்சிறந்த சான்றாகும். மற்றொரு வகையில் புழங்கு பொருள் பண்பாடு மானிடவியலோடு தொடர்புடையதும் ஆகும். கலை, இசை, நடனம், குறியீட்டியல், சடங்கியல் போன்ற பிரிவுகள் சார்ந்த மானிடவியலோடும், கைவினைப் பொருட்கள் செய்தல் தொழிநுட்ப ஒழுங்கமைப்புகள் சார்ந்த மானிடவியலோடும் தொடர்புடையது ஆகும். எனவே புழங்கு பொருட்களைக் கொண்டு ஒரு சமூகம் எத்தகைய வாழ்வியலை வாழ்ந்துள்ளது என்பதையும் அவர்களின் பண்பாடுகளையும், பழக்க

வழக்கங்களையும், தெளிவாக உணர்ந்து கொள்ள அடிப்படையான ஆதாரமாகப் புழங்கு பொருட்கள் விளங்குகின்றன என்பதை உணரமுடிகின்றது.

பண்பாடு என்பதைக் கற்றோர் மரபு என்ற நிலையிலிருந்து மாற்றி நாட்டார் புலத்தின் மீது நம் கவனத்தைத் திசை திருப்பிய சிந்தனை மரபுக்குரியவர் ஆ.சிவம் ஆவார். பண்பாட்டின் எல்லைகளையும் விளிம்புகளையும் கண்டறிந்து ‘அடித்தள மக்கள் வரலாறு ’எழுதியவர். புழங்கு பொருள் பண்பாடு எனும் ஒரு ஆய்வுக் களத்தில் முதன்முதலாகத் ‘தோணி’ பற்றிய முன்னெடுப்பும், ‘உப்பிட்டவரை’ எனும் நூலும் பேராசிரியரின் புலமையாக்கங்களில் பெருமதியானது என்று பனைமரமே பனைமரமே எனும் நூலின் முன்னியம்பலில் முனைவர் பக்தவச்சல பாரதி (2011)[1] புழங்கு பொருள்சார் பண்பாடு குறித்ததான ஆய்வு முன்னெடுப்பின் தேவையைக் குறிப்பிடுகின்றார்.

> “காந்தியடிகள் பனைமரங்களை வெட்டி வீழ்த்துவதன் மூலம் மது உற்பத்தியைத் தடுத்திட முடியும் எனக் கருதி மதுதரும் மரங்களை வெட்டி வீழ்த்தும் இயக்கத்தைத் தொடங்கினார். காந்திடிகளைத் தீவிரமாகப் பின்பற்றியவர்கள் தென்னை மரங்களையும், ஈச்சமரங்களையும் வெட்டத் தொடங்கினர். அப்போது வங்க மாநிலத்தில் மீரா பென் அம்மையார் சுற்றுப் பயணம் செய்த போது ஈச்சம் பதநீரிலிருந்து இனிய பனைவெல்லம் செய்வதைப் பார்க்க நேர்ந்தது. மீரா பென் அம்மையார் வங்க மாநிலத்தில் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பியபோது காந்தியடிகளிடம் இனிய ஈச்ச வெல்லத்தைக் கொடுத்தார். இவ்வெல்லத்தைச் சுவைத்துப் பார்த்த காந்தியடிகள் மதுதரும் மரங்களிலிருந்து மதுரமான வெல்லம் தயாரிக்க முடியும் என்பதை அன்றுதான் அறிந்தார்.”

## 3.0 பனைமரம்

தமிழகத்தின் மாநில மரமாக விளங்கும் பனைமரம் தமிழகமெங்கும் பரவலாக இருந்தாலும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றது. தோப்புகளாகவும் பனைமரங்கள் வளர்க்கப்பட்டுப் பல்வேறு வகைகளில் மக்கள் அவற்றைப் பயன்படுத்தி வாழ்ந்து வந்தனர். இன்றும் பனைமரத்தை நம்பியே தம் வாழ்வை நடத்தும் பல்வேறு குடும்பங்களும் உள்ளன. நுங்கு, பதநீர், கருப்பட்டி எனும் பனை வெல்லம், கள்ளு, பனங்கற்கண்டு, பனங்கிழங்கு, பனம்பழம் என உணவுப் பொருள்களும், ஓலை, கீற்று, நார், வாரை, தடுப்பு வேலி மட்டை, வளை, பங்கட்டை, கயிறு என வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களும் எனப் பனை எண்ணற்றப் பயன்களை அள்ளித் தருகின்றது. மேலும் பனைகளைத் தோட்டம், வயல்வெளிகளின் கரைகளில் நட்டு வைத்து எல்லைப் பிரிப்புக்குப் பயன்பட்டும் வந்துள்ளன. இதனைப் ’பனஞ்சாலை’ என்றும் ’பனைவேலி’ என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர். இன்றும் மேற்கண்ட தென்மாவட்டங்களில் வழக்கில்

உள்ளதைக் காணமுடிகின்றது. இவை வளர்ந்துள்ள பகுதியில் மண் அரிப்பும் இருக்காது. நீர் வளம் காக்கப்பட்டு, விவசாயத்திற்கு உதவியாகவும் இருந்து வருகின்றன.

### 3.1 பனையின் இலக்கியச் சிறப்புகள்

யாரிடத்தும் எவ்விதமான பலனும் உதவியும் எதிர்பார்க்காமல் தன்னுடைய எல்லாப் பலன்களையும் உலகத்திற்குக் குறிப்பறிந்து வழங்கும் பனைமரம் நீர் ஊற்றாமலேயே பயன்தருகிறது. அதைப்போலவே மேன்மக்கள் கைமாறு கருதாமல் உதவி செய்பவர்கள் என்று நீதிவெண்பா பனைமரத்தையும் நல்லொழுக்க வாழ்வையும் தொன் தமிழகப் பண்பாட்டையும் விளக்குகின்றது.

‘உத்தமர் தாம் ஈயுமிடத்து ஓங்குபனை போல்வோரே
மத்திமர் தாம் தெங்குதனை மானுவரே’ – நீதிவெண்பா- 92[5]

பனையின் உயர் சிறப்பினை வெளிப்படுத்தும் விதமாக வள்ளுவர், தினையளவு குற்றம் நடந்திருந்தாலும் அதனைப் பனை மரத்தினைப் போலப் பெரியதாக எண்ணுவர் பெரியோர் என்று பனையின் உயர்ந்த சிறப்பினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

’தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வார் பழிநாணு வார்’ - குறள். 443[6]

’தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்’ - குறள். 1292[6]

’தினைத் துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வர் பயந்தெரி வார்’ - குறள். 104[6]

என்று பனையின் சிறப்பினை உணர்ந்து அதன் இன்றியமையாமையை மக்களுக்கு உணர்த்துவதற்காகப் பனையின் சொல்லாட்சியை வள்ளுவர் பயன்படுத்தியிருக்கின்றார்.

### 3.2 பனையின் வரலாற்றுச் சிறப்புகள்

தமிழர்களின் வாழ்வோடு இணைந்த வரலாறாகப் பனைமரத்திலிருந்து கிடைக்கும் உணவுப்பொருள்கள், அதனின் ஓலையாலும் மரத்தாலும் செய்யப்படும் புழங்கு பொருட்கள் உள்ளிட்டவை அமைகின்றன. பனைமரத்தின் இயல்புகள் மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழ்ச் சமூகம் பனையின்

நன்மைகளை நன்கு அறிந்து வைத்துள்ளது. “திருநெல்வேலி மாவட்டத்தில் வறண்ட பகுதிகளில் பனையோலைப் பாய்களை உற்பத்தி செய்து பிழைக்கிறார்கள். முற்றிய சாரோலையால் மிட்டாய் பெட்டிகளையும், பழக்கொட்டான்களையும், பனைவெல்லக் கொட்டான்களையும் உற்பத்தி செய்வதில் பல்லாயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். இத்தொழிலைப் பெரும்பாலும் பெண்களே செய்கிறார்கள்.” (சௌந்தரராஜன், 2004)[7] பனைமரங்களின் மூலம் கிடைக்கும் உணவுப் பொருள்கள் மட்டுமல்லாது புழங்கு பொருட்களாகவும் மருத்துவக் குணமுடையதாகவும் தொன்று தொட்டுப் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. சிறப்பாகப் பனை மரம் தனது மேன்மைமிக்க இயல்புகளால் தமிழ் இலக்கியங்களிலும் வரலாற்று நூல்களிலும் மேற்கோள் காட்டப்பட்டுச் சிறப்பிடம் பெறுகிறது.

### 3.3 பனையின் வகைகள்

தமிழகத்தில் பெரும்பான்மையாக வளர்ந்து வரும் பனைமரம், தொன்று தொட்டுப் பலருக்கும் வேலைவாய்ப்பை வழங்கிவருகின்றது. பனைமரம் விதையிலிருந்து வளர்ந்து தன் இறுதிக்காலம் வரையிலும், இறந்த பின்பும் மனிதருக்குப் பல்வேறு வகைகளில் பயன்களைக் கொடுக்கிறது. பனை பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 15 அடி உயரம் வரை வளர்க்கிறது. நூறடிக்கும் மேலாக நூறாண்டு ஆயுலைக் கொண்டுள்ளது. இது பத்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பூப்பூக்கும். அப்போதுதான் ஆண் பனை, பெண் பனை எவை என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். பொதுவாகப் பனையை ஆண் பனை, பெண் பனை என இரண்டு வகையில் குறிப்பிடுவர். பெண் பனையைப் பருவப் பனை என்றும், ஆண் பனையை அழகுப் பனை என்றும் குறிப்பிடுவது வழக்கம். மேலும் பனை மரங்களை 34 பெயர்களில் அழைத்து வருகின்றனர். பனையின் வகைகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

- ஆண் பனை
- பெண் பனை
- கூந்தல் பனை
- தாளிப் பனை
- குமுதிப் பனை
- சாற்றுப் பனை
- ஈச்சப் பனை
- ஈழப் பனை
- சீமைப் பனை
- ஆதம் பனை
- திப்பிலிப் பனை
- உடலர் பனை
- இச்சிலிப் பனை
- குடைப் பனை
- இளம் பனை

- கூறை பனை
- இடுக்குப் பனை
- தாதம் பனை
- காந்தம் பனை
- பாக்குப் பனை
- ஈரம் பனை
- சீனப் பனை
- குண்டு பனை
- அலாம் பனை
- கொண்டை பனை
- ஏரிலைப் பனை
- ஏசறுப் பனை
- காட்டுப் பனை
- கதலிப் பனை
- வலியப் பனை
- வாதப் பனை
- அலகுப் பனை
- நிலப் பனை
- சனம் பனை

மேற்கண்ட அனைத்து வகைப் பனைமரங்களும் அவற்றிற்கே உரிய சிறப்புப் பயனைத் தருகின்றன. பயன் கொடுப்பதற்கேற்ப அதன் பெயரும் அமைந்துள்ளது என்பது தென்மாவட்ட மக்களின் கருத்தாக உள்ளது.

### 3.4 பனையின் பயன்கள்

பனைமரத்திலிருந்து கிடைக்கக்கூடிய ஓலை, நுங்கு, மரம், நார் போன்றவற்றைக்கொண்டு மனிதர்கள் அடைந்த பயன்களைக் கணக்கிட்டால் எண்ணிலடங்கா! சமதளப் பகுதி மக்களைப் போன்று மலையினப் பழங்குடி மக்களும் தாங்கள் வாழும் மலைகளில் பனைமரத்தால் செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகின்றனர். சோறு சமைத்து வடிக்கவும், அதனை தட்டியில் இட்டு ஆர வைக்கவும், கூழ் சமைக்கவும் எனப் பனையால் ஆன பொருட்களைப் பலவகையிலும் பயன்படுத்தி வருகின்றனர். பனை ஓலைகளால் ஆன பெட்டிகளைப் பலசரக்குப் போட்டு வைக்கும் பாத்திரமாகவும், வயல்களுக்குச் செல்லும் போது சோறு கொண்டு செல்லும் கூடையாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இவை போன்று தங்கள் வீடுகளில் நடக்கும் சடங்கு முறைகளுக்கும், வாழ்வியல் சூழல்களுக்கும் ஏற்ற வகையில் பனைமரம் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகின்றது. கார்த்திகைத் திருநாளில் ஆண் பனையிலிருந்து பாலிகளை வெட்டிக் குழி தோண்டி தீ வைத்து மூட்டம் போட்டுக் கரியாக எடுத்து உரலில் இடித்துத் துணிப்பையில்

வைத்துக் கார்த்திகை மாதத்தில் மாவலி சுற்றுவது இளைஞர்களின் வழக்கமாகும். இஃது இன்றும் தமிழகமெங்கும் பரவலாகப் பயன்பாட்டில் உள்ள தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகும். இத்தகைய பண்பாட்டு நிகழ்விற்கும் பனைமரத்தினது பங்கு தவிர்க்கமுடியாத வகையில் உள்ளது.

## 4.0 ஓலைச்சுவடி

தமிழ்மொழி வரலாற்றில் இன்று வரையில் போற்றுதலுக்குரிய ஒன்றாக ஓலைச்சுவடிகள் இருந்து வருகின்றன. தமிழ் இன்று செம்மொழி ஆவதற்கு மூலகாரணமாக இருந்தவை, பனையின் இலக்குளால் செய்யப்பட்ட சுவடிகளில் பொறிக்கப்பட்ட பழம் பனுவல்களே ஆகும். அச்சு வடிவம் வருவதற்கு முன்பாகவே பல்லாயிரக்கணக்கான நூல்களைப் பனை ஓலைகளைக் கொண்டு பதப்படுத்தி எழுத்தாணிகளால் எழுத்து வடிவங்களைப் பதித்து வைத்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள் ஆவார்கள். அதற்கு உறுதுணையாக இருந்தது பனைமரமேயாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த பனையை எழுத்துப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்த தமிழனின் நுண்ணறிவு எண்ணிப் போற்றுதலுக்குரியது ஆகும்.

## 4.1 ஓலைச்சுவடி செய்முறை

பதமான பனை ஓலைகளை வெட்டி நிழலில் உலர்த்தி, ஓலையின் நடுப்பகுதியில் உள்ள ஈர்க்கு எனும் நரம்புகளைப் பிரித்தெடுத்தும் பிரித்தெடுக்காமலும் பதப்படுத்தி நறுக்கி, துளையிட்டு, பின்பு எழுத்தாணிகளைப் பயன்படுத்தி எழுத்துக்களைப் பொறித்தனர். எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதற்காகப் பச்சிலைச்சாறுகளையோ எண்ணெய்க் கொண்டு தயார் செய்யப்பட்ட மையினைத் தடவியோ, மஞ்சள் பூசியோ ஓலையை நுட்பமாகப் பாதுகாத்துப் பல்வேறு நூல்களை எழுதியுள்ளனர்.

இத்தகைய வரலாற்றுத் தரவுகளைத் தன்னகத்தே தாங்கி நிற்கும் சுவடிகள் காலந்தோறும் புதுப்பிக்கப்பெற்றும், பின்பு சில மக்களின் மூட நம்பிக்கையினால் ஆற்று வெள்ளத்தில் தூக்கியெரிந்தும் அழிந்துபோயின. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கழித்தும் மீதமிருக்கும் சுவடிகளைப் பண்பாட்டு ஆவணங்களாகக் கருதி அழிவிற்குள்ளாகாமல் பாதுகாத்து வருகிறனர். இது நமது பழமையையும், பண்பாட்டையும் பேணிக்காத்த தமிழனின் பெருமையை நிலை நிறுத்துவதற்கான காரணியாக விளங்குகிறது. இத்தகைய மகத்தான பணியில் சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உ.வே.சா. நூல்நிலையம், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், சரசுவதிமஹால் நூலகம், சைவ வைணவ மடங்கள் மற்றும் புதுச்சேரி பிரெஞ்சு நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

### 5.0 பனைப்பொருட்கள்

பனையின் ஓலை, நார், மட்டை, மரத்தினைக் கொண்டும் பல்வேறு புழங்கு பொருட்கள் செய்து அவற்றின் துணைக்கொண்டு பண்டைய தமிழர்கள் முதல் இன்று வரையும் பலர் வாழ்ந்து வந்துள்ளதை மலையின மக்களிடையேயும், சமதளப்பகுதி மக்களிடையேயும் புழக்கத்தில் உள்ள புழங்கு பொருட்களின் பயன்பாட்டினை வைத்து உய்த்துணர முடிகின்றது. அவ்வகையில் பனைநாராலும், ஓலையாலும் செய்யப்பட்ட பயன்பாட்டுப் பொருட்களின் அளவினைக் கொண்டு, அவை எதற்கான பயன்பாட்டுப் பொருள்கள் அவற்றின் பெயர் போன்ற விவரங்களை அறிய முடிகிறது. அரைப்படி முதல் 5 படி வரை கொள்ளவு கொண்டவை கொட்டான்கள் எனவும், 7 படியிலிருந்து 11 படி வரை கொள்ளளவு உள்ள பெட்டிவகைகள் சீர்வரிசைப் பெட்டிகள் (முகூர்த்த அரிசி கொண்டு செல்லப் பயன்படுவது) எனவும், 20 படியிலிருந்து 30 படிகள் வரை கொள்ளளவு கொண்ட நார்ப்பெட்டிகள் அரைப்பெட்டிகள் என்றும், 5 மரக்கால் அளவுள்ள பெரிய நேர்த்தியான நார்ப்பெட்டிகள் கடகம் என்றும், நெல் மற்றும் இதர தானியங்களைக் காற்றில் தூற்றித் தரம் பிரிக்கப் பயன்படுத்துபவை தூற்றுப் பெட்டிகள் என்றும், தானியங்களைப் புடைத்து எடுக்கச் சுளகு அல்லது முறம் என்றும் சில புழங்கு பொருட்களுக்குப் பெயரிட்டுப் பயன்படுத்தி வந்துள்ளதை அறியமுடிகிறது.

பனையால் ஆன பெட்டிகள், கூடை, முறம், போன்றவை துளை விழுந்துவிட்டாலோ அல்லது சிதைந்து விட்டாலோ அதனைச் சரி செய்வதற்குக் குறவர் இனப் பழங்குடிகள் பனை நாரினைக் கொண்டு சரி செய்ய தெருக்களில் முறம் கட்டலையோ முறம் என்றும், பொல்லம் பொத்தலையோ, கூடை முடையலையோ என்றும் கூவிக்கொண்டு குறத்தி மகள் வருவது கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு வரை இருந்து வந்துள்ளது. ‘பொல்லம்’ என்பதற்குத் ‘தமிழ்ப் பேரகராதி’ (1982)[2] தைக்கை, இணைக்கை, சேர்த்துத் தைக்க உதவும் சிறுதுண்டு எனப் பொருள் தருகின்றது.

சிறுபிள்ளைகளுக்கு நொருக்குத் தீனி கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் சின்னுப்பெட்டி, கிணற்றிலிருந்து தன்னீர் இரைப்பதற்குப் பட்டை ஓலையால் பின்னப்பட்டு இடையில் இருக்கும் ஓட்டைகளை மெழுகு, மரத்தின் பிசின்களைக் கொண்டு மொழுகியும் பெரிய அளவிலான பெட்டிகளை உருவாக்கிப் பயன்படுத்தல், பொங்கல் வைப்பதற்கும் தை மாதங்களில் கோவில்களில் பொங்கலிட்டு வழிபாடு செய்வதற்கும் பனை ஓலையினால் செய்யப்பட்ட பெட்டி வகைகளையே பயன்படுத்தியுள்ளனர். திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் திருமண விழாவின் போது மணமகனுக்கு வேட்டிசட்டை, புடவை, அரிசி, காய்கறி, மசாலாப் பொருட்களைப் பெட்டியில் (கூடை போன்ற அமைப்புடையது) போட்டு மணமகனின் சகோதரிகள் மணமகனுக்குக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதற்குச் சீர்ப்பெட்டி, அல்லது வாழும் பெட்டி என்று பெயரிட்டு வழங்குகின்றனர். இத்தகைய பண்பாடு சார்ந்த நிகழ்வுகளில் பனையினால்

செய்யப்பட்ட புழங்கு பொருட்களைப் பயன்படுத்தி இருப்பதைக் காணும்போது தமிழர்களின் வாழ்வில் பனையினால் செய்யப்பட்ட புழங்கு பொருட்களின் முக்கியத்துவமும் அதனின் பயன்பாடும் எத்தகைய நிலையில் இருந்துள்ளன என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

## 6.0 பாய் பின்னுதல்

பனையின் ஓலையால் செய்யும் மற்றுமொரு சிறந்த பயன்பாட்டுப்பொருள் ஓலைப்பாய் ஆகும். அவை சரக்குகளைக் கட்டி அனுப்பவும், திருவிழா அல்லது வீட்டின் சுப நிகழ்ச்சிகளில் சோறு பொங்கிக் கொட்டி வைக்கவும், அதிக அளவிலான காய்கறிகளைப் போட்டு நறுக்குவதற்கும், அதுவே மண் தரையில் படுத்து உறங்கவும், இறந்தவர்களைக் கிடத்தி வைக்கவும் எனப் பாயினைப் பல்வேறு வகைகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். பிறப்புச் சடங்குகளில் குழந்தை பிறந்தவுடன் அதைத் தீட்டாகக் கருதி வீட்டின் திண்ணையில் குச்சில்கட்டி (வேலி) குழந்தை ஈன்றவளின் இருப்பிடமாகவும், சடங்கு ஆன பெண்களுக்குக் குடிசை கட்டவும் எனப் பனை ஓலையினால் ஆன பாய் சடங்கு நிகழ்வில் தவிர்க்க முடியாததாக இருந்து வந்துள்ளது. இதைத் தவிர, மட்டையிலிருந்து நார் எடுத்துக் கயிறுகள், வீட்டிற்குச் சுண்ணாம்பு பூசுவதற்குப் பயன்படும் தூரிகை, ஆடைகள், கால்மிதிகள், விசிறிகள், வீட்டு அழகு சாதனப் பொருள்கள் எனப் பனையிலிருந்து பல்வேறு விதமான புழங்குப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இன்றும் தூத்துகுடி மாவட்டம் திருச்செந்தூர், மணப்பாடு பகுதிகளில் பனை ஓலையால் ஆன பெட்டிகள், அலங்காரப் பொருட்கள், குழந்தைகளுக்குக் கிளுகிளுப்பைகள், பெண்கள் ஒப்பனைப் பொருட்களைப் போட்டு வைக்கப்பயன்படும் பெட்டி, மேசையில் எழுதுகோல்கள் வைக்கப் பயன்படும் கூடை, தலையில் மாட்டிக் கொள்ளும் தொப்பி (cap), ஓலைக் குடை போன்ற பயன்பாட்டுப் பொருட்களைச் செய்யும் குடிசைத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

## 7.0 பதனி

பனையின் மூலம் கிடைக்கும் சாறு பதனீர் ஆகும். சங்க காலம் முதல் இன்று வரையில் மக்களின் வாழ்க்கையில் உற்சாகப் பானமாகவும், உடலினை உறுதி செய்யும் அருமருந்தாகவும் பதனியும் கள்ளும் இருந்துவந்துள்ளன. இதனின் மருத்துவ குணம் ஆங்கில மருத்துவ உலகினில் செய்ய முடியாதவற்றையும் செய்து காட்டும் ஓர் அற்புத மூலிகையாகத் திகழ்கிறது. பதனீர் குடிப்பதால் இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்கள் விருத்தியாகும், நோய் உண்டாக்கும் கிருமித் தொற்றுகளைத் தடுக்கும் என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவித்துள்ளன. மேலும் பதநீரைப் பயன்படுத்திக் கருப்பட்டி, கற்கண்டு, வெல்லம் போன்ற உணவுப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. மேலும் பதனியின் மூலம் பெறப்படும் உணவு வகைகளும் ஏராளம் ஆகும்.

### 7.1 பதனீர் எடுக்கும் முறை

ஆண்பனையின் பூக்கள் எனப்படும் அலவரைகளையும் பெண்பனை மரத்தின் பிஞ்சு நுங்குகளிலும் நசுக்கு, சீவி, நாரைக் கொண்டு கட்டி, வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவாகப் பிஞ்சு ஓரத்தில் லேசாகக் கீறிவிட்டு, தினமும் இருமுறை மரம் ஏறிப் பதப்படுத்துவர். சொட்டுச் சொட்டாகக் கலயத்தில் (மண்பானை) பால்(கள்) இறங்கும். இப்படி ஒரு மரத்தில் மூன்று மாதம் வரை பால் எடுக்கலாம். அந்தப் பாலில் சுண்ணாம்பு சேர்த்தால் பதநீர் தயாராகிவிடுகிறது. சில இடங்களில் கலயத்தின் அடியில் சுண்ணாம்பை முன்கூட்டியே தடவிக் கட்டிவிடுவர். இதனால் மரத்திலிருந்து கலயத்தை இறக்கும் போதே பதநீர் தயாராகிவிடுகிறது. சுவையில் பனைமர பதநீரைவிடத் தென்னைமரப் பதநீர் மிஞ்சமுடியாது.

சுண்ணாம்பு சேர்த்து எடுக்கப்படும் பனஞ்சாறு எனும் பதநீரை மேக நோய் இருப்பவர்கள் 40 நாள்கள் இடைவிடாது அருந்தி வர அந்த நோய்ப் பாதிப்பில் இருந்து விடுபடலாம். பதநீரில் இருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவற்றுக்கும் நோய் தீர்க்கும் குணங்கள் உண்டு. நுங்கு கோடை கலத்தில் ஏற்படும் தாகத்திற்கு மிகவும் ஏற்றது. பனங்கிழங்கை உலர்த்தி, இடித்து மாவாக்கி, அதனுடன் தேங்காய் உப்புப் போட்டுச் சாப்பிட்டு வர உடலுக்குப் பலம் உண்டாகும். மேலும் உடல் பருமன் ஆகும். பனம் பூவைச் சுட்டுச் சாம்பலாக்கி அதில் சிறிது தேங்காய் எண்ணெய் கலந்து புண்களின் மீது தடவ ஆறிவிடும். இவை போன்று எண்ணற்ற மருத்துவக் குணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பனையினைத் தமிழக மக்கள் மீட்டுருவாக்கம் செய்யும் பணிகளில் தற்பொழுது ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பது மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதாக நேர்காணலின் போது பெரும்பாலானவர்கள் கூறுவதைக் கேட்கமுடிந்தது.

### 8.0 பயன் தரும் பாகங்கள்

நுங்கு, பனங்காய், பனம்பழம், பனங்கிழங்கு, பனை ஓலை, குருத்து, பனை நார், மட்டை, பதநீர், வைரம் பாய்ந்த மரம், பனம்பழம் முதலியன பனை மரத்தினால் மனித இனம் பயனடையக் கூடியப் பாகங்கள் ஆகும். புழங்கு பொருட்கள் செய்வதற்குப் பனையின் ஓலை மட்டும் அல்லாது அவற்றின் நார், பனை மட்டை முதலியவை பயன்படுகின்றன. பனை வைத்தவனுகுப் பயன் தராது என்பர், இதன் வளர்ச்சி ஆரம்பத்தில் மெதுவாக இருந்தாலும் நூறு ஆண்டுகள் உயிருடன் இருக்கும் இது நூறு அடிக்கு மேல் வளரும் தன்மை உடையதாகும்.

### 8.1 மருத்துவப் பயன்கள்

பனைநீர் உடலுக்கு ஊட்டத்தை அளிப்பது. குளிர்ச்சி தருவது. வெப்பத்தைத் தணிப்பது. துவர்ப்பும் இனிப்பும் கலந்த சுவை உடையது, அதிகாலை வேளையில் பதநீரை 100-200 மி.லி. அருந்தி வந்தால் போதும், உடல் குளிர்ச்சியும் ஊட்டமும் பெறும். வயிற்றுப் புண் ஆறிவிடும். உடல் சுறுசுறுப்படையும். பனை மரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கைத் தொடர்ந்து சாப்பிட்டு வரக் கோடை காலத்தில் ஏற்படும் வேர்க்குரு நீங்கும். தோலுடன் நுங்கைச் சாப்பிட்டு வரச் சீதக்கழிச்சல் (வயிற்றுப்போக்கு) நீங்கும். பனங்கற்கண்டை ஏதாவது ஒரு வகையில் அடிக்கடிப் பயன்படுத்தி வர அம்மை நோயால் ஏற்பட்ட உடல் வெப்பம், தாகம் போன்றவை நீங்கும். பனங்கிழங்கிற்கு உடல் குளிர்ச்சியைத் தரும் தன்மையுண்டு. இந்தக் கிழங்கைச் சாப்பிட்டு வந்தால் மேனி அழகு பெறும், உடல் பலமும் அதிகரிக்கும்.

பனங்கள் மயக்கம் தரும். அறிவை மயக்கும். ஆனால் உடல் நலத்தைக் கொடுக்கும். சுண்ணாம்பு சேர்த்த பதநீரைக் காய்ச்சினால் இனிப்பான கருப்பட்டி கிடைக்கும். கருப்பட்டியே பல நோய்களுக்கு மருந்தாகவும் ஆரோக்கிய உணவாகவும் விளங்குகின்றது.

### 9.0 இயற்கை அரணாகும் பனைமரம்

பனைமரங்கள் மனிதர்களுக்கு உணவாகவும், மருந்தாகவும், புழங்குபொருட்கள் செய்வதற்கு ஆதாரமாகவும் இருந்துவந்துள்ளதைக் கண்டோம். இவற்றைவிடவும் முக்கியமானதொரு பணியைப் பனைமரம் செய்யவல்லது. இயற்கையினால் ஏற்படும் புயல், மழை, வெல்லம் என இயற்கையிடர்பாடுகளில் இருந்து நம்மைக் காத்து வருவதைச் சமீபகாலமாகத் தமிழகத்தில் நடக்கும் பல இயற்கை நிகழ்வுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கடந்த 16/11/2018 அன்று தமிழகத்தின் தென்மாவட்டங்களான நாகை, தஞ்சை, புதுக்கோட்டை, திருவாரூர் போன்ற மாவட்டங்களைப் புரட்டிப் போட்ட கஜா புயல் அங்கிருந்த தென்னை, வாழை, பல வீடுகள் என அத்துனையும் சாய்த்து தள்ளிய நிலையில் பனைமரங்கள் மட்டும் எந்தவொரு பாதிப்பிற்குள்ளாகாமல் கம்பீரமாக நிற்பதைக் காண முடிந்தது. இதனைத் தெளிவுபடுத்தும் விதமாக நவம்பர் 27 தேதியிட்ட இந்து தமிழ் நாளிதழ் பின்வருமாறு கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

”கஜா புயலின் போது நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாவூர் மாவட்டங்களில், பனை தவிர பிற வகை மரங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மின்கம்பங்கள் வேருடன் சாய்ந்த நிலையில், புயலின் வேகத்தை எதிர்கொண்டு ஆயிரக்கணக்கான பனை மரங்கள் தாக்குப்பிடித்திருக்கின்றன.

இதுபோன்ற தீவிரமான பருவநிலை நிகழ்வுகளின்போது, பனை மரங்களால் எப்படி தாக்குப்பிடிக்க முடிகிறது என்று விளக்குகிறார், சென்னை கிறித்தவக் கல்லூரியின் தாவரவியல் துறையின் முன்னாள் தலைவர் எம்.நரசிம்மன். “பனை மரங்கள் தாக்குப்பிடித்து நிற்பதற்கு மூன்று முக்கியக் காரணங்கள் உண்டு. முதலாவது, பனைமர வேரின் அமைப்பு. பனை மர வேர் நார்த்தன்மை கொண்டது என்றாலும், அதன் சுவாசத் திறன் அதிகம். இரண்டாவது, பனை மரத் தண்டின் நாள அமைப்பு அதை இலகுவானதாக வைத்திருக்கிறது. மூன்றாவதாக, மரத்தின் உச்சிப்பகுதி, மடங்கிய இலைகளும், அதன் அமைப்பும் வலுவான காற்றையும் தாக்குப்பிடித்து நிற்க உதவுகிறது” என்கிறார்.

கஜா புயலில் பனை மரங்கள் அனைத்தும் தப்பிவிட்ட என்று சொல்ல முடியாது. சில மரங்கள் விழுந்திருக்கின்றன. ஆனால், தென்னை மரங்களை இரண்டு மூன்று துண்டுகளாக உடைத்தெறிந்த புயல் காற்றால், அதே போன்று சேதத்தைப் பனை மரத்திடம் ஏற்படுத்த முடியவில்லை. தமிழகத்தின் மாநில மரமான பனை, பழங்காலத்தில் சேர மன்னர்களின் அதிகாரபூர்வ மரமாக இருந்தது.

”தலைக்கனம் இல்லாவிட்டால் எதையும் சமாளிக்கலாம் என்பார்கள். பனை மரத்தைப் பொறுத்தவரை, அதன் தலைப் பகுதி கனமானது அல்ல. 2011–இல் தானே புயலின்போது கூடப் பனை மரங்கள் தாக்குப்பிடித்து நின்றதைப் பார்த்திருக்கிறேன்” என்கிறார் நரசிம்மன். பனை மரங்களின் தாங்கும் தன்மை, அந்த மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது. “எங்கெல்லாம் பனை மரங்கள் வளர்கின்றனவோ, அங்கெல்லாம் நிலத்தடி நீர் இருப்பதை உறுதிசெய்துகொள்ள முடியும். ஏனெனில், பனை மரத்தின் வேர்கள் மிக ஆழமாக ஊடுருவக்கூடியவை” என்றும் சுட்டிக்காட்டுகிறார் அவர்.

”பனை மரத்தின் உச்சிப் பகுதி, தண்டு பகுதி, வேர்ப் பகுதி ஆகியவற்றின் தனித்தன்மைகள், பேரழிவுகளைத் தாங்கும் வலிமையை அம்மரத்துக்கு அளிக்கின்றன” என்கிறார் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் துறைத் தலைவர், டாக்டர் பி.இரவிச்சந்திரன். பனை மரம் தொடர்பாக விரிவான ஆய்வுகளை நடத்தியவர் அவர். தென்னை மரங்களில் இருப்பதைப் போல், பனை மரங்களின் தலைப் பகுதி கனமாக இருக்காது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

பனை மரத்தின் வேர்கள், நார்த்தன்மை கொண்டவை, ஐந்தடி சுற்றளவில் படர்ந்திருக்கும் பனை மர வேர்கள், நிலத்துக்குள் 5 முதல் 10 அடி ஆழம் வரை ஊடுருவியிருக்கும். எனவே, பனை மரம் அத்தனை எளிதில் வேரோடு சாய்ந்துவிடாது” என்கிறார் அவர். பனை மரம் ஒற்றைத்தன்மை இல்லாத மரம் என்று சொல்லத்தக்க வகையில், அதன் எடை, வலிமை, கடினத் தன்மை ஆகியவை மாறும் தன்மை கொண்டவை என்று குறிப்பிடுகிறார் டாக்டர் இரவிச்சந்திரன்.

நார்த்தன்மை கொண்ட நாளத் தொகுப்புக் கொண்டதன் காரணமாக, பனை மரத்தின் உட்பகுதியின் வெளிப்புறச் சுவரை நோக்கிச் செல்லச் செல்ல மரத்தின் அடர்த்தி அதிகரிக்கிறது. பின்னர் அது படிப்படியாக நெகிழ்வுத்தன்மை அடைகிறது. பனை மரத்தின் வெளிப்புற அடுக்குக் கடினத்தன்மை கொண்டதாகவும், நெகிழ்வுத்தன்மையுடனும் இருப்பதால், எத்தனை வேகம் கொண்ட காற்றையும் தாங்கி நிற்கும். எளிதில் முறியாது" என்கிறார் அவர்! மேற்கண்டவாறு பனைமரத்தினது நன்மைகளைப் பற்றியும் அவற்றை காக்க வேண்டிய கடமையைப் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறியுள்ளது.

**தொகுப்புரை**

மேற்கண்ட பயன்களை அளித்து நம் வாழ்வோடு ஒன்றி இரண்டறக் கலந்து இருந்த பனை மரங்களை இன்று அழிவின் விளிம்பில் கொண்டு சென்றுள்ளோம். இயற்கையான பயன்களை அள்ளித்தரும் இவற்றை விட்டு நாம் ஆங்கில மருத்துவத்தினைக் கைக்கொண்டு பல நோய்களின் பிடியில் சிக்குண்டு இருக்கின்றோம் என்பதை இன்னும் நாம் உணரவில்லை. இது மிகுந்த வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பனை விவசாயம் அழிவுக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பனைமரம் ஏறியவர்கள் வேறு தொழிலுக்குச் செல்லும் நிலையில், கூலித்தொழிலாளிகளாக வாழ்க்கை நடத்தும் அவல நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற பனைமரங்கள் உள்ள மாவட்டங்களில் வறட்சி காரணமாகவும், பேணுதல் இல்லாமல் விறகுக்கு வெட்டிவிற்கும் நிலையினாலும் பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மேலும் நாகரிக வளர்ச்சி என்ற பெயரில் நகர வாழ்க்கையின் மீது ஈர்ப்புக் கொண்டு கிராமப் பகுதியில் வாழும் மக்களும் இயற்கையினால் கிடைக்கும் உணவு வகைகளை மறந்து மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு வகைகளையும் வேதிப்பொருட்கள் கலந்த உணவுகளையும் உண்டு நோயினை வலிந்து பெற்றுக் கொள்ளும் நிலைக்கும் ஆளாகியிருக்கின்றார்கள்.

பனைமரத்தினைப் பற்றிய மேற்கண்ட புரிதல்களோடு நோக்கும் போது தமிழர்கள் அடையாளமாக இருந்து தமிழர்களைக் காத்து, எண்ணற்ற பயன்களை அளித்து வந்த பனைமரம் இன்று எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி வெட்டப்பட்டு, செங்கல் சூளைக்கு எரிபொருளாக லாரிகளில் அனுப்பப்பட்டு வருகின்றது என்பது வேதனைக்குரிய செய்தியாக உள்ளது.

எந்தவிதச் செலவுமின்றி வளர்ந்து பயன் தந்து நிற்கும் சில பனை மரங்களையாவது பாதுகாக்க வேண்டியது நம் கடமையாகும். பனையின் பயனைப்பெறப் புதிய வழிகளை உருவாக்க வேண்டும். புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் தமிழர்களின்

அடையாளமாக உள்ள பனை மரத்தை அழிவின் விளிம்பிலிருந்து மீட்க வேண்டும் என்பது இயற்கை ஆர்வலர்களின் விருப்பமாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. Bhaktavatsala Bharati. (2011). *Cultural anthropology (பண்பாட்டு மானிடவியல்).* Trichy: Adaiyalam Publications.
2. Tamil Glossary - *Lexicon (தமிழ்ப் பேரகராதி - லெக்சிகன்).* (1982).Chennai: Chennai University.
3. *Senthamil etymology glossary (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி).* (2005). Chennai.
4. Rejitkumar, T. (2009). *Pulmonary culture (புழங்குபொருள் பண்பாடு).* Chennai: Kavya Publications.
5. Nitivenpa. (1980). *S.N.PRS*, Roja Muthiah Library, Chennai.
6. Puliyur Kesigan. (1998). *Thirukurral Parimegalar texts (திருக்குறள் பரிமேலழகர் உரை).* Chennai: Poomuhar Publications.
7. Sauntharajan. (2004). *Village development through palm tree (பனை மரங்களின் மூலம் கிராம முன்னேற்றம்).* Chennai: Manimegalai Publications.



**Citation in Tamil**
ஆசைக்கண்ணு, ச. (2019). பொருள்சார் பண்பாடு (பனைமரம்). *முவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 3*(2), 172-187. https://doi.org/10.33306/mjssh/13

**Citation in Tamil @ Romanised**
Asaikkannu, S. (2019). Poorulsaar panpaadhu (panaimaram). *Muallim Journal of Social Science and Humanities*, *3*(2), 172-187. https://doi.org/10.33306/mjssh/13

**Citation in English**
Asaikkannu, S. (2019). Materialistic culture (palm tree). *Muallim Journal of Social Science and Humanities*, *3*(2), 172-187. https://doi.org/10.33306/mjssh/13